**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திருமதி.G.ஆனந்தி, எம்.ஏ., எம்.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.

2022ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 17ம் நாள் புதன்கிழமை

**அ.வ.எண்.195/2021 இல் இ.ம.எண்.02/2021**

லோகநாயகி ... மனுதாரர் /வாதி

/ எதிர் /

1.ஜோதீஸ்வரி
2.கிருஷ்ணவேணி
3.துரைசாமி
4.கதிர்வேல் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 05.07.2022ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.குமரவேல் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.P.காமாட்சிகுமார் அவர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் / வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**ஆணையுரை**

2012ம் வருடத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாக ஒப்பந்தத்தின்படி மனுதாரர் / வாதிக்கு ஒதுக்கப்பட்ட மனுச்சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:</u>**

மனுதாரர் அசல் வழக்கின் வாதி. அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளும் உடன்பிறந்த சகோதரிகள். 3ம் எதிர்மனுதாரர் / 3ம் பிரதிவாதி, 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் கணவர். 4ம் எதிர்மனுதாரர் / 4ம் பிரதிவாதி, 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதியின் கணவர். தாவா சொத்துக்கள் ஆதியில் சிவன்மலைக் கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. சிவன்மலைக்கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகன்களும், பேரன்களும் கூட்டாக அனுபவம் செய்து வந்து 13.03.1967ம் தேதியில் ஒரு பாகசாசனம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். பாகசாசனத்தின்படி முத்துசாமிக்கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் தாவா ஏ செட்யூல் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் தகப்பனார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் 06.7.2010ம் தேதியில் காலமாகிவிட்ட நிலையில் 2012ம் வருடம் வரை மனுதாரர் / வாதியும், மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளும் தாவா சொத்தினை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர். மேற்படி கூட்டனுபவம் சாத்தியப்படாத நிலையில் மனுதாரர் / வாதியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளும் வாய்மொழியாக பாகம் பிரித்து அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை நாளது தேதி வரை சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகின்றனர். இந்நிலையில் மனுதாரர் / வாதியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளும் செய்து கொண்ட வாய்மொழி பாகப்பிரிவினைப்படி மனுதாரர் / வாதிக்கு அரசு புறம்போக்கில் உள்ள 30 தென்னைமரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

21.07.2021ம் தேதியில் மனுதாரர் / வாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து மனுதாரர் / வாதியை, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதால் அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் தாவா மனுச் சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அனுபவத்தை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

3) <u>1, 3, 4 எதிர்மனுதாரர்கள் / 1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u> :

உபயதரப்பினர்களின் உறவுமுறை ஒப்புக்கொள்ளப்படுகிறது. முத்துசாமிகவுண்டர் தாவா சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் மனுதாரர் / வாதியையும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளையும், இவர்களின் தாயாரான சரஸ்வதி என்பவரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு 06.07.2010ம் தேதியில் இறந்துவிட்டார். தாவா சொத்துக்களில் தாயார் சரஸ்வதிக்கும் பங்குள்ளது. மனுதாரர் / வாதியின் தாயாரான சரஸ்வதிக்கு அவரது பெற்றோர் வழி கிடைத்த சொத்துக்கள் எதிருரை சி செட்யூலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சி செட்யூல் சொத்துக்களை மனுதாரர் / வாதி அனுபவம் செய்து வந்தார். முத்துசாமி கவுண்டர் இறந்த பின் தாவா சொத்துக்கள் அமைந்துள்ள கிராமத்தில் 2ம் எதிர்மனுதாரரும் அவரது தாயார் சரஸ்வதியும் குடியிருந்து வருவதாலும், 3ம் எதிர்மனுதாரர் தாவா சொத்துக்களில் ஒரு பகுதியை குத்தகைக்கு ஒட்டி வந்ததாலும் தாவா சொத்துக்களில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் குடியிருந்து அனுபவம் செய்து வருகின்றனர். மனுதாரர் / வாதி தாவா சொத்துக்களை பாகம் பிரித்து தரக்கோரிய போது மனுதாரர் / வாதிக்கும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கும், சரஸ்வதிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் 2016ம் வருடம்

ஏற்பட்ட வாய்மொழி பாகத்தில் தாவா ஏ செட்யூல் சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரருக்கும், தாவா பி செட்யூல் சொத்துக்கள் 2ம் எதிர்மனுதாரருக்கும், சரஸ்வதிக்கு அவரது பெற்றோர் வகையில் கிடைத்த சொத்துக்களான சி செட்யூல் சொத்துக்கள் மனுதாரர் / வாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி சொத்துக்களை அவரவர் தனி சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகின்றனர். மனுதாரர் / வாதி கூறுவதுபோல் எந்த வாய்மொழி பாகமும் ஏற்படவில்லை. மனுதாரர் / வாதிக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை பொறுத்து மனுதாரர் / வாதி தனது தனிப்பட்ட சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார் என்பது மட்டும் தெரிவிக்கப்பட்டுள்ளதே அல்லாமல் தாவா சொத்தின் எந்த பகுதியை மனுதாரர் / வாதி அனுபவித்து வருகிறார் என்று தெரிவிக்கவில்லை. வாய்மொழி பாகத்தின்படி ஆற்றுப்புறம்போக்கில் உள்ள 2C பட்டா தென்னை மரங்கள் மனுதாரர் / வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளது பொய்யானது. மனுச்சொத்துக்களுக்கு மனுதாரர் / வாதியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளும் கூட்டு பங்குதாரர்கள் என்ற நிலையில் ஒரு கூட்டு பங்குதாரர் மற்ற கூட்டு பங்குதாரர்கள் மீது உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர முடியாது. எனவே, இம்மனுவானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

6) 2012ம் வருடத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின்படி மனுதாரர் / வாதிக்கு ஒதுக்கப்பட்ட மனுச்சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்று தற்காலிக

உறுத்துக்கட்டளை உத்தரவும், அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவும் பிறப்பிக்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில், சாட்சிகள் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மனுதாரர் / வாதி தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.15 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கற்றறிந்த இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரை கேட்கப்பட்டது.

7) மனுதாரர் / வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்துக்கள் ஆதியில் சிவன்மலைக் கவுண்டருக்கு பாத்தியப்பட்டிருந்த நிலையில் சிவன்மலைக்கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் கூட்டாக அனுபவம் செய்து வந்து 13.03.1967 ம் தேதியில் ஒரு பாகசாசனம் ஏற்படுத்திக் கொண்டதில் வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான முத்துசாமிக்கவுண்டருக்கு பாகத்தின் மூலமாகவும், கிரையத்தின் மூலமாகவும் தாவா சொத்துக்கள் பாத்தியப்பட்டிருந்ததாகவும், முத்துச்சாமி கவுண்டர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் 06.7.2010 ம் தேதியில் காலமாகிவிட்ட நிலையில் 2012 ம் வருடம் வரை மனுதாரர் / வாதியும், மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளும் தாவா சொத்தினை கூட்டாக அனுபவம் செய்து வந்த நிலையில் மேற்படி கூட்டனுபவம் சாத்தியப்படாத நிலையில் மனுதாரர் / வாதியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளும் வாய்மொழியாக பாகம் பிரித்து அவரவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தினை நாளது தேதி வரை சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருவதாகவும், மனுதாரர்/ வாதிக்கு மனுச்சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் அதனை இடையூறு செய்து வருவதாகவும், மனுச்சொத்தினைப் பொறுத்து மனுதாரர் /

வாதியின் பெயருக்கு வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.6 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களின் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், அதுபோல் மனு இரண்டாவது அயிட்ட சொத்தினைப் பொறுத்து 2C மரவரி பட்டா செலுத்தியதற்கான ரசீதுகள் மனுதாரர் / வாதியின் பெயரில் உள்ளது என்ற நிலையில் தாவா சொத்துக்கள் மனுதாரர் / வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருகிறது என்பது மனுதாரர் / வாதியால் நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிட்டுள்ளார்.

8) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முத்துசாமிகவுண்டர் தாவா சொத்துக்களைப் பொறுத்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் மனுதாரர் / வாதியையும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளையும், இவர்களின் தாயாரான சரஸ்வதி என்பவரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு 06.07.2010 ம் தேதியில் இறந்துவிட்ட நிலையில் மனுதாரர் / வாதி மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தாயாரான சரஸ்வதி ஆகியோர்களுக்கு முத்துசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தலா 1/4 பங்கு பாகம் உள்ள நிலையில் மனுதாரர் / வாதி மனுச்சொத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தேவராயபுரத்தில் வசித்து வருவதாகவும், மனுதாரர் / வாதியின் கணவர் பழனிச்சாமி, மனுதாரர் / வாதி மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளின் தாயாரான சரஸ்வதியின் சகோதரர் என்ற நிலையில் மேற்படி சரஸ்வதியின் பெற்றோருக்கு தேவராயபுரத்தில் சொத்துக்கள் இருந்த நிலையில் அவர்களது குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழிபாகத்தில் மனுதாரர் / வாதியின் தாயாரான சரஸ்வதிக்கும் அவரது ஐந்து சகோதரர்களில் ஒருவரான பழனிச்சாமிக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி பழனிச்சாமியின் பாகத்திற்கு அருகில்

சரஸ்வதிக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் மனுதாரர் / வாதியின் தாயாரும் மேற்படி பழனிச்சாமியின் சகோதரியுமான சரஸ்வதி பொள்ளாச்சி தாலூக்காவில் வசித்து வந்ததால் அவருக்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை மனுதாரர் / வாதியை பயிர் செய்ய அனுமதி அளித்துள்ள நிலையில் முத்துசாமி கவுண்டரின் இறப்பிற்கு பின்னிட்டு 2016ம் ஆண்டில் தான் மனுதாரர் / வாதிக்கும், 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கும், அவரது தாயாருக்கும் இடையே பாகம் ஏற்பட்டதில் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ள தாவா ஏ செட்யூல் சொத்து 1ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதிக்கும், தாவா பி செட்யூல் சொத்து 2ம் எதிர்மனுதாரர் / 2ம் பிரதிவாதிக்கும், தாவா சி செட்யூல் சொத்து மனுதாரர் / வாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அடிப்படையில் அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களில் பல்வேறு அபிவிருத்திகள் செய்து கிணறுகள், போர்வெல்கள் அமைத்து மின் இணைப்புகள் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், அது சம்மந்தமான ஆவணங்கள் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.15 வரையிலான சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் / வாதி 2012ம் ஆண்டில் வாய்மொழி பாகம் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ள போதிலும், எந்த தேதியில், யார் முன்னிலையில், எவ்வாறு பாகம் பிரிக்கப்பட்டது என்பது பற்றிய எந்த விபரங்களையும் குறிப்பிடவில்லை என்றும், மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.11 ஆவணம் நகைக்கடன் தள்ளுபடி ரசீது என்ற நிலையில் தாவா சொத்துக்கள் சம்மந்தமாக மனுதாரர் / வாதி எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யாத நிலையிலும், ஒரு கூட்டுரிமையாளருக்கு எதிராக மற்றொரு கூட்டுரிமையாளர் உறுத்துக் கட்டளை பரிகாரத்தை கோர இயலாது என்பதால் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதிட்டுள்ளார்.

9) இருதரப்பு வாதுரையிலிருந்தும், வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்தும், அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கானது முடிவிற்கு வரும் வரையில் தாவா சொத்தின் மீதான மனுதாரர் / வாதியின் அனுபவத்தினை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் யாதொரு இடையூறும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

10) மனுதாரர் / வாதி தரப்பில் மனுச்சொத்துக்கள் மனுதாரர் / வாதி, 1, 2 எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாரான முத்துசாமிகவுண்டருக்கு ம.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தின் அடிப்படையிலும், ம.சா.ஆ.2 கிரைய பத்திரத்தின் அடிப்படையிலும் பாத்தியப்பட்டிருந்த நிலையில் அவர் எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் 06.07.2010 ம் தேதியில் இறந்துவிட்ட நிலையில் மனுதாரர் / வாதியும் அவரது சகோதரிகளுமான 1, 2 எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளும் அதனை கூட்டாக அனுபவம் செய்து வந்த நிலையில் மேற்படி கூட்டனுபவம் சாத்தியப்படாத காரணத்தால் 2012 ம் ஆண்டில் வாய்மொழி பாகம் செய்து கொண்டதில் தாவா சொத்துக்கள் மனுதாரர் / வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருவதாகவும், தாவா சொத்து மனுதாரர் / வாதியின் பெயரில் உள்ளது என்பதை காண்பிக்கும் சிட்டா ம.சா.ஆ.6 என்றும், அடங்கல் பதிவேடு ம.சா.ஆ.7, கிராம நிர்வாக அலுவலரின் சான்று ம.சா.ஆ.8 என்றும், இரண்டாவது அயிட்ட சொத்திற்கு வரி செலுத்தப்பட்டதற்குண்டான ரசீதுகள் ம.சா.ஆ.9 மற்றும் ம.சா.ஆ.10 என்றும், மனுச்சொத்தினைப் பொறுத்து பெறப்பட்டிருந்த விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டதற்குண்டான சான்று ம.சா.ஆ.11 என்றும் கூறப்பட்டுள்ளது.

11) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரருக்கும், 1, 2 எதிர்மனுதாரர்களுக்கும் இடையே 2012 ம் ஆண்டில் எந்தவொரு பாகமும்

ஏற்படவில்லை என்றும், 2016ம் ஆண்டில் தான் வாய்மொழி பாகம் ஏற்பட்டதாகவும், மனுதாரர், 1, 2 எதிர்மனுதாரர்களின் தாயாரான சரஸ்வதிக்கு அவரது பெற்றோர் மூலமாக பாகம் கிடைத்த தேவராயபுரத்தில் உள்ள சொத்துக்களை மனுதாரரும், அவரது கணவரும் சரஸ்வதியின் சகோதரருமான பழனிச்சாமி ஆகியோர் பயிர் செய்து வந்த நிலையில் மேற்படி தேவராயபுரத்தில் உள்ள சொத்துக்கள் தான் மனுதாரரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

12) மனுச்சொத்துக்களைப் பொறுத்து 2012ம் வருடத்தில் பாகம் ஏற்பட்டதாக மனுதாரர் / வாதி தரப்பிலும், 2016ம் வருடத்தில் பாகம் ஏற்பட்டதாக 1, 2 எதிர்மனுதாரர்களின் தரப்பிலும் கூறப்பட்டுள்ளது.

13) மனுச்சொத்துக்களில் மனுதாரர் / வாதிக்கு எந்தவொரு உரிமையும், அனுபவமும் இல்லை என்று எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மனுதாரர் / வாதி தரப்பில் 2012ம் ஆண்டில் வாய்மொழிபாகம் ஏற்பட்டதாக கூறியுள்ள போதிலும் எந்த மாதம், எந்த தேதியில் பாகம் ஏற்பட்டது என்பது குறித்தும், யார் முன்னிலையில் எவ்வாறு பாகம் ஏற்பட்டது என்பது குறித்தும், யார் யாருக்கு எந்த எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறித்தும் மனுதாரர் / வாதி தரப்பில் எதுவும் கூறப்படவில்லை.

14) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் 2012ம் ஆண்டில் வாய்மொழி பாகம் ஏற்படவில்லை என்று மறுத்துரைக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.6, மனுதாரர் / வாதி, 1, 2 எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் மற்றும் அவர்களது தாயாரின் பெயரில் உள்ள கூட்டு பட்டா என்றும், அதுபோல் ம.சா.ஆ.7 அடங்கல் ஆவணம் மனுதாரர் / வாதிகள் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளின் தாயாரின் பெயரிலுள்ள அடங்கல் என்றும், அதன் அடிப்படையில் மனுதாரர் / வாதி மனுச்சொத்தில் தனித்த

உரிமை எதுவும் கோர இயலாது என்று கூறப்பட்டுள்ளது.

15) மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.6 மற்றும் ம.சா.ஆ.7 ஆவணங்கள் மனுதாரர் / வாதியின் பெயரில் தனித்து ஏற்படவில்லை. ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலரின் சான்றிலும் க.ச.எண்.298/2B, க.ச.எண்.301/2, க.ச.301/3 ஆகியவற்றில் பொதுவில் பாகம் பிரியாத பொது சொத்தில் 1/3 பாகம் மனுதாரர் / வாதியின் பெயரில் உள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ம.சா.ஆ.6 முதல் ம.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் மனுச்சொத்துக்கள் மனுதாரர் / வாதியின் தனித்த அனுபவத்தில் உள்ளதாக கருத இயலாது.

16) மனுதாரர் / வாதி தரப்பில் மனுச்சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர் / வாதியால் பெறப்பட்ட பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட சான்று ம.சா.ஆ.11 என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் ம.சா.ஆ.11ல் சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள பயிர்கடனானது மனுச்சொத்தின் அடிப்படையில் பெறப்பட்ட பயிர்கடன் இல்லை என்றும், அது நகையின் பெயரில் பெறப்பட்ட பயிர்கடன் என்றும் கூறி எ.ம.சா.ஆ.15 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

17) ம.சா.ஆ.11 மற்றும் எ.ம.சா.ஆ.15 ஆவணங்களை பார்க்கும்போது, ம.சா.ஆ.11 சான்றானது மனுச்சொத்தினைப் பொறுத்து மனுதாரர் / வாதியால் பெறப்பட்ட பயிர்கடனுக்கு வழங்கப்பட்ட சான்று இல்லை என்பது தெரிய வருகிறது.

18) எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் மனுச்சொத்துக்கள் மனுதாரர் / வாதியின் அனுபவத்தில் இல்லை என்றும், ஒரு கூட்டுரிமையாளருக்கு எதிராக மற்றொரு கூட்டுரிமையாளர் உறுத்துக் கட்டளை பரிகாரத்தை பெற இயலாது என்று கூறப்பட்டுள்ள நிலையில் தாவா மனுச்சொத்துக்கள் மனுதாரர் / வாதியின் தனித்த அனுபவத்தில் உள்ளது என்பது மனுதாரர் / வாதி தரப்பில் தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ள

ஆவணங்கள் மூலமாக தெரிய வராத நிலையில் மனுச்சொத்தினைப் பொறுத்து 2012ம் வருடத்தில் மனுதாரர் / வாதி கூறுவது போல் பாகம் ஏற்பட்டதா அல்லது 2016ம் வருடத்தில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் கூறுவது போல் பாகம் ஏற்பட்டதா என்பது குறித்தும் மனுச்சொத்துக்கள் மனுதாரர் / வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பது குறித்தும் வழக்கு விசாரணையின்போது உபயதரப்பினர்களாலும் முன்னிறுத்தப்படும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக தான் முடிவிற்கு வர இயலும்.

19) மனுச்சொத்து மனுதாரர் / வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அவரது தனித்த அனுபவத்தில் உள்ளது என்பது மனுதாரர் / வாதியால் நிரூபிக்கப்படாத நிலையில் வழக்கின் இந்நிலையில் மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக முதல் தோன்றல் வழக்கும், சட்ட சமன் நோக்கும் எழுந்துள்ளதாக கருத இயலாது. எனவே, மனுச்சொத்தினைப் பொறுத்து மனுதாரர் / வாதி கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர் / வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20) முடிவாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றவாணங்கள் பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 13.03.1967 | பாகசாசனத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.2 | 28.10.1977 | கிரைய சாசனத்தின் சான்றிட்ட சார்பதிவு நகல் |
| ம.சா.ஆ.3 | 07.11.1977 | சிவன்மலைகவுண்டர் என்பவரின் இறப்பு சான்றின் நகல் |
| ம.சா.ஆ.4 | 06.07.2010 | முத்துச்சாமிகவுண்டர் என்பவரின் இறப்பு சான்றின் நகல் |
| ம.சா.ஆ.5 | 09.01.2012 | முத்துச்சாமிகவுண்டர் என்பவரின் வாரிசு சான்றின் நகல் |
| ம.சா.ஆ.6 | 14.07.2021 | பட்டா எண்.958–க்கான கணினி வழி சிட்டா |
| ம.சா.ஆ.7 | 15.07.2021 | தாவா சொத்துக்களுக்கு கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல் |
| ம.சா.ஆ.8 | 15.07.2021 | கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சொத்துரிமை சான்று |
| ம.சா.ஆ.9 | 05.11.2019 | மனுதாரர் / வாதி 2C மரவரி செலுத்தியதற்குண்டான வரி ரசீது |
| ம.சா.ஆ.10 | 11.12.2020 | மனுதாரர் / வாதி 2C மரவரி செலுத்தியதற்குண்டான வரி ரசீது |
| ம.சா.ஆ.11 | 18.02.2021 | தமிழக அரசின் பயிர்க்கடன் தள்ளுபடி உத்தரவின் நகல் |
| ம.சா.ஆ.12 | 21.07.2021 | மனுதாரர் / வாதி வடக்கிபாளையம் காவல்நிலையத்தில் புகார் அளித்ததற்கான மனு |
| ம.சா.ஆ.13 | – | மனுதாரர் / வாதியின் பெயரிலுள்ள குடும்ப அடையாள அட்டையின் நகல் |

**<u>எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்:</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 04.06.1953 | கிரைய பத்திரத்தின் நகல் |
| எ.ம.சா.ஆ.2 | 28.11.2020 | சரஸ்வதி என்பவரின் இறப்பு சான்றின் நகல் |
| எ.ம.சா.ஆ.3 | 25.08.2021 | கிருஷ்ணவேணி என்பவரின் பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி |
| எ.ம.சா.ஆ.4 | 21.12.2021 | சிவன்மலைக்கவுண்டர் என்பவரின் பெயரில் செலுத்தப்பட்ட 2C மரவரி ரசீது |
| எ.ம.சா.ஆ.5 | 28.11.2017 | 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் பெயரில் ஆழ்துளை கிணறு அமைத்ததற்கு செலுத்தப்பட்ட |

Page numbers

| | | |
|---|---|---|
| | | தொகை ரசீது |
| எ.ம.சா.ஆ.6 | – | 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் பெயரில் மின்சார உபகரணங்கள் வாங்கியதற்கான ரசீதுகள் (3 எண்ணம்) |
| எ.ம.சா.ஆ.7 | 16.12.2017 | 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் பெயரில் மின்சார உபகரணங்கள் வாங்கியதற்கான ரசீது |
| எ.ம.சா.ஆ.8 | – | 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் பெயரில் விவசாயத்திற்கு உரங்கள் வாங்கியதற்கான ரசீதுகள் (4 எண்ணம்) |
| எ.ம.சா.ஆ.9 | 26.03.2022 | 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள ரொக்க ரசீது |
| எ.ம.சா.ஆ.10 | – | முத்துச்சாமி என்பவரின் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் (3 எண்ணம்) |
| எ.ம.சா.ஆ.11 | – | சிவன்மலைக்கவுண்டர் என்பவரின் பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள் (3 எண்ணம்) |
| எ.ம.சா.ஆ.12 | – | 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கடன் பாஸ் புத்தகம் |
| எ.ம.சா.ஆ.13 | 18.02.2021 | 1ம் எதிர்மனுதாரர் / 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள விவசாய பயிர்க்கடன் தள்ளுபடி ரசீது |
| எ.ம.சா.ஆ.14 | 04.04.2022 | முத்துச்சாமிக்கவுண்டர் வகையராக்கள் பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது |
| எ.ம.சா.ஆ.15 | 13.04.2022 | நாகூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் வழங்கிய சான்றிதழ் |

ஒப்பம்/–(G.ஆனந்தி)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

Page numbers

---------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

அ.வ.எண்.195/2021 இல் இ.ம.எண்.02/2021

நாள் : 17.08.2022

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---------------------------------